**O.P.44/2020**

Date : 06.03.2025

ம.சா.1 : கருப்பசாமி

ம.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

நான் விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் டிப்ளமோ இன் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும் போது தபால்காரராக பணிபுரிந்தேன். தற்போது அஞ்சலக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் சென்னையில் பணிபுரிந்தேன். தற்போது குருவிகுளம் ஊரில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு திருமணம் 01.12.2016 அன்று கோவில் பட்டி அருள் மிகு செண்பக வள்ளி அம்மன் கோவிலில் வைத்து நடைபெற்றது. என் தகப்பனாரும் எதிர்மனுதாரரின் தாயாரும் உறவினர்கள் என்றால் சரியல்ல. என் திருமணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் சரியல்ல. ஒரு வாரத்திற்கு முன்புதான் நடைபெற்றது. எதிர்மனுதாரர் நான்குநேரியில் ஒரு பெரிய குடும்பம் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. சங்கத்தின் மூலம் தகவல் கிடைத்ததில் குடும்பத்தை பற்றி விசாரித்தேனா என்றால் என் அம்மா அப்பா எதிர்மனுதாரர் வீட்டில் வந்து பார்த்தார்கள். என் மனைவி BA English, BA Hindi படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி படிப்பு பற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் திருமணம் முடிந்து 1 வாரம் கோவில் பட்டியில் வசித்தேன். சென்னைக்கு திருமணம் முடிந்து எவ்வளவு நாட்களில் சென்றேன் என்றால் ஒரு வாரம் கழித்து சென்றேன். சென்னையில் நாங்கள் என் பெற்றோருடன் வசித்தோம் என்றால் சரியல்ல. நானும் எதிர்மனுதாரரும் மட்டும்தான் வசித்தோம். என் மனைவிக்கு இறை பக்தி அதிகம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சென்னையில் தனிக்குடித்தனம் போன பின்பு அவர் எதையாவது சொல்லி புலம்புவார். அவர் புலம்புவார் என்று நான் குறிப்பிட்டு மனுவில் சொல்லவில்லை என்றால் அவர் என்ன பேசுவார் என்று வெளியில் கேட்காது. எதிர்மனுதாரர் அவ்வாறு புலம்பவில்லை என்றும் நான் மனுவிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு திருவாசகம், சிவபுராணம் ஆகியவைகள் மனப்பாடமாக தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்

மனைவி திருமணத்திற்கு முன்பு நான்குநேரி இராமனுஜம் மெட்ரிகுலேசன் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. என் மனைவி ஆசிரியராக பணியாற்றிய விவரம் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு மனநலம் சரியல்ல என்று நான் சொல்லியுள்ளதில் அந்த பிரச்சனை எந்த தேதியில் தொடங்கியது என்றால் 25.01.2017 அன்று தொடங்கியது. அவ்வாறு பிரச்சனை ஏற்பட்ட போது என் மனைவியை நான் 27.01.2017 அன்று சென்னை குரோம்பேட்டையில் உள்ள பாலாஜி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அந்த மருத்துவமனை மனநல மருத்துவமனையா என்றால் பொது மருத்துவமனை. நான் சென்னையில் வேலை பார்க்கும் போது காலை 8.30 சென்று விட்டு மாலை 5 மணிக்கு வீடு திரும்புவேன். அது வரையிலும் என் மனைவி மட்டும் தனியாக இருப்பார். திருமணத்திற்கு முன்பு வரை என் மனைவி கூட்டுக்குடும்பத்தில் வசித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சென்னையில் இருந்த சமயத்தில் என் அம்மா அப்பா எங்களை பார்க்க வருவார்கள் என்றால் வந்தது கிடையாது. என் அம்மா அப்பா அடிக்கடி சென்னைக்கு வருவார்கள் என்றால் சரியல்ல. நான் என் அம்மா அப்பா அனைவரும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. இந்து சமயத்தை சார்ந்தவர்கள். என் அம்மா அப்பா சென்னைக்கு வரும் போது எதிர்மனுதாரரை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்ய கட்டாயப்படுத்தி கொடுமை படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் எதிர்மனுதாரரை மதமாற்றம் செய்ய கோரி வற்புறுத்தியதால் அவருக்கு மனநிலை பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் மனைவிக்கு தீராத மனநோய் இருக்கிறது என்று கோரி அவருக்கு பாதுகாவலர் நியமிக்க நான் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நல்ல நிலையில் இருப்பதால்தான் பாதுகாவலர் நியமிக்க கோரி நான் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் எதிர்மனுதாரரின் நடவடிக்கை நார்மலாக இல்லை. நல்ல மனநிலையில் இருந்தால்தான் ஒருவரால் பொதுவாக ஆசிரியராக வேலை பார்க்க முடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது திருமணத்தின் போது எதிர்மனுதாரருக்கு 18 பவுன் தங்க நகைகளும், ரூ.2 லட்சம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்களும் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சீர்வரிசைகள் அ னைத்தும் என் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. மனுவில் எதிர்மனுதாரருக்கு மனநிலை சரியில்லை என்று எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் தெரிவித்ததற்கு அவரது

பெற்றோர்கள் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தால் அவருக்கு மனநிலை சரியாகிவிடும் என்று ஜோசியர் சொல்லியதாக நான் என் மனுவில் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. கூறியது உண்மைதான். ம.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரர் நன்றாகத்தான் இருந்தார் என்றும் திருமணத்திற்கு பின்பு நானும் எனது பெற்றோர்களும் செய்த கொடுமைகளால்தான் அவருக்கு மனநலம் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவருக்கு ஏற்பட்ட மனநல குறைவிற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனைவி என்ற முறையில் எனது அடிப்படை கடமைகள் சேவைகள் அனைத்தும் செய்தார்கள் என்றால் சரியல்ல.